ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
09 MAY 2023
திருவட்டார்

1824

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - கன்னியாகுமரி மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான இளநிலை உதவியாளர் திரு.(லேட்) Y.ஜான்பிரைட் என்பவரின் மனைவி திருமதி.R.K.ரெஜிலதா, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் - பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ7) துறை

அரசாணை (4ப) எண்.16

நாள்: 03.04.2023.
சுபகிருது, பங்குனி 20
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.ஈ4/1209/2022, நாள் 01.04.2022.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.36462/2022/டி3, நாள்:09.12.2022.

*****

ஆணை:

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 28.07.2021 அன்று பணியிடைக் காலமான திரு.(லேட்)Y.ஜான்பிரைட் என்பவரின் மனைவியுமான திருமதி.R.K.ரெஜிலதா என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 04.04.2022 பிற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து

ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி.R.K.ரெஜிலதா கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 31.08.2021 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 01.06.1980 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 41 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 41 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 41 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணிநியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனியரின் பணியை வரன்முறை செய்யக் கோரியுள்ள கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவினை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி.R.K.ரெஜிலதா என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 04.04.2022 பிற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 25.01.2023–ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.384/ட்டி1/2023–1 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.4273446/ஜி1/2023, நாள்:20.03.2023–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.

மா நிலக் கணக்காயர், சென்னை -9/18.

கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15

மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.

<u>நகல்:</u>

திருமதி.R.K.ரெஜிலதா, இளநிலை உதவியாளர்,

ஊரக வளர்ச்சிப் பிரிவு, கன்னியாகுமரி மாவட்டம்.

(வழிமாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.)

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ம.அ.......

பிரிவு அலுவலர்

ந.க.எண்: அ1/5200/2021. நாள்: 19.05-2021.

- நகல் சார்பு செய்யப்படுகிறது.

பெறுநர்,

திருமதி. R.K. ரெஜிலதா

இளநிலை உதவியாளர்

திருவட்டார் ஊராட்சி ஒன்றியம்.

19/5/2021

COMMISSIONER

PANCHAYAT UNION

THIRUVATTAR

19.5.21.